# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

*இலங்கையின் வெளிநாட்டுத் துறை, 2018இன் பின்னரைப்பகுதியில் நிலவிய உயர்ந்தளவு பாதிக்கப்படும் தன்மைகளிலிருந்து மீட்சியுற்று 2019இன் முதலரைப்பகுதியில் வலுவடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையில் காணப்பட்ட கணிசமான சுருக்கம் மற்றும் பணிகள் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் என்பன 2019இன் முதற்காலாண்டுப்பகுதியில் நடைமுறைக் கணக்கில் மிகையொன்றினைத் தோற்றுவித்தன. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை உடனடுத்து பணிகளிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்தமையினால் 2019இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் நடைமுறைக் கணக்கு பாதகமாகத் தாக்கமடைந்தது. இறக்குமதிச் செலவினம் 16.1 சதவீதத்தினால் பெருமளவிற்குக் குறைவடைந்தமையினாலும் ஏற்றுமதி வருவாய்களின் 4.7 வளர்ச்சியினாலும் 2019இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அத்தகைய குறைப்பிற்கு கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், தங்கம் மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கமே தூண்டுதலாக அமைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட சுருக்கம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினைத் தொடர்ந்து சுற்றுலாவிலிருந்தான வருவாய்களின் மீதான தாக்கத்தினையும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமான தன்மையினையும் பெருமளவிற்கு எதிரீடு செய்தமையின் மூலம் 2019இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக் கணக்கில் சிறிதளவு பற்றாக்குறை தோற்றுவிக்கப்பட்டது. ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டமை காரணமாக சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு பாரிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்த வேளையில், அரசாங்கம் 2019இன் முதலரைப்பகுதியில் முன்னர் வழங்கிய ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மீளச்செலுத்தியது. எனினும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமையின் காரணமாக நிதியியல் கணக்கின் ஏனைய பாய்ச்சல்கள் மிதமான தன்மையினைத் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், 2019இன் முதலரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, இலங்கை 2019 மேயில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதியினைப் பெற்றுக்கொண்டதுடன் ஏழாவது தொகுதி 2019இன் நவெம்பர் ஆரம்பப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏப்பிறல் மற்றும் ஓகத்தில் சில தளம்பல்கள் அவதானிக்கப்பட்ட போதும் மேம்பட்ட வர்த்தக நிலுவையுடன் சேர்ந்து நிதியியல் கணக்கிற்குக் கணிசமானளவு உட்பாய்ச்சல் ஏற்பட்டமையின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா 2019 ஒத்தோபர் நடுப்பகுதியில் 0.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட தூண்டுதலளிக்கும் நிலைமைகள் 2019இன் இதுவரையான காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கியை அனுமதித்தன. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019இன் செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு மேம்பட்டு ஏறத்தாழ 4.6 மாத இறக்குமதிகளுக்கு சமமானவையாகக் காணப்பட்டன. 2019இன் முதலரைப்பகுதியில் உலகளாவிய ரீதியில் பல முக்கிய அபிவிருத்திகள் அவதானிக்கப்பட்டன. இவை இலங்கையின் மீது சில கசிவுத் தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். பாரிய பொருளாதாரங்களிடையே காணப்படும் வர்த்தகப் பதட்டங்கள், ஏனைய புவிசார் அரசியல் நிலைமைகளுடன் சேர்ந்து காணப்படும் பிறெக்சிட்டின் நிச்சயமற்ற தன்மைகள் என்பன குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதி வரையில் உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புக்களைக் குறைத்துவிடக்கூடும். இது இலங்கைக்கான முதலீட்டு உட்பாய்ச்சல்களைப் பாதிக்கும். மேலும், 2019இன் இறுதிப்பகுதியிலும் 2020 இலும் நடைபெறவிருக்கும் தேர்தல்களின் காரணமாக நிச்சயமற்ற கொள்கைகளினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மனோபாவமும் பாதிக்கப்படக்கூடும்.*

5

### வணிகப்பொருட்களிலான வர்த்தகம் மற்றும் வர்த்தக நிலுவை


- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது.** இதற்கு இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தமையும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பும் வழிவகுத்தன. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 2.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிச் செலவினம் 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 7,240 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,854 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 2,386 மில்லியனால் சுருக்கமடைந்தது.

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மிதமாக அதிகரித்தன.** 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 8,031 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வேளையில், வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதி இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,331 மில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்து (ஆண்டிற்கு ஆண்டு) மொத்த ஏற்றுமதிகளில் 79 சதவீதத்திற்கு வகைகூறின.** ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் + மீளக் கிடைப்பெற்றமையின் நன்மைகள் மற்றும் ஐக்கிய அமெரிக்க - சீனா, வர்த்தகப் பதட்டங்களின் காரணமாக வர்த்தகம் திசைதிரும்பியமை, என்பனவற்றின் பயன் காரணமாக புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,737 மில்லியனுக்கு 8.3 சதவீதம் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,454 மில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்தான உயர்ந்த கேள்விகள் உதவியாக அமைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1,539 மில்லியனுக்கு 7.7 சதவீதத்தினால் அதிகரித்தன. அறுவைச் சிகிச்சைக்கும் ஏனைய நோக்கங்களுக்குமான கையுறைகளின் மேம்பட்ட செயலாற்றத்தின் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் ஐ.அ.டொலர் 591 மில்லியனுக்கு 1.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 32.3 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 121 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு 2019 யூனில் யப்பானுக்கான கடற்போக்குவரத்து கலமொன்று விநியோகிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும், அச்சிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பொருட்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் இக்காலப்பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. எனினும், பெற்றோலிய உற்பத்திகள், பொறிகள் மற்றும்

வரைபடம் 5.1


வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.2

ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2019)




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

எந்திரச்சாதனங்கள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.


- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகைகூறிய வேளாண்மை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1,667 மில்லியனுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 915 மில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவுகள் 5.1 சதவீதத்தினால் அதிகரித்த போதும் குறைந்த விலைகளே காரணமாக அமைந்தன. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2018இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 5.20 உடன் ஒப்பிடுகையில் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.66 இற்கு 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 203 மில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு கறுவா மற்றும் மிளகிலிருந்தான குறைந்த வருவாய்களே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறப்பர் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 232 மில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், இக்காலப்பகுதியில் கடலுணவு ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 184 மில்லியனுக்கு 8.9 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) உயர்வடைந்ததுடன் ஐரோப்பியச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் 23.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 21 மில்லியனாக விளங்கி 4.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** இவ்வகையின் கீழ் இரும்புத் தாது, இரும்புக் கழிவு மற்றும் சாம்பல் கட்டி என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த வேளையில் கற்கள் மற்றும் விலையுயர்ந்த கற்களின் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன.

- **அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைத் தணிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளைத் தொடர்ந்து 2018இன் பிற்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியிலும் தொடர்ந்தது.**

வரைபடம் 5.3

இறக்குமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2019)




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றமதியாளர்கள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

இதன்படி, 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 15,083 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 12,886 மில்லியனுக்கு 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிகளில் காணப்பட்ட அத்தகைய குறைப்பிற்கு இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளிலும் அதனைத் தொடர்ந்து நுகர்வுப்பொருட்களிலும் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது. அதேவேளை, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் எரிபொருள் தவிர்ந்த இறக்குமதிகளின் செலவினம் ஐ.அ.டொலர் 10,309 மில்லியனுக்கு 16.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 57 சதவீதம் கொண்ட பாரிய பங்கிற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்களின் மீதான செலவினம் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7,380 மில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது.** புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், கனிப்பொருள் உற்பத்திகள் தவிர்ந்த அனைத்து வகைகளிலும் காணப்பட்ட குறைந்த செலவினம் இக்குறைப்பிற்குப் பங்களித்திருக்கிறது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,577 மில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெயின் அளவு 17.2 சதவீதத்தினால் அதிகரித்த போதும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரியினதும் குறைந்த அளவுகளே முக்கிய காரணமாகும். ஆய்விற்குரிய காலப்பகுதியில் அனைத்து எரிபொருள் உற்பத்திகளினதும் விலைகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்பட்டன. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை 2018இன் முதல் எட்டு மாத

காலப்பகுதியின் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 76.49 இலிருந்து பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 69.13 இற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோக இறக்குமதிகள் என்பன மீதான செலவினம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 118 மில்லியனுக்கு 77.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தீர்வை வேறுபாடுகளிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான சட்டத்திற்கு முரணான வணிகத்தினைத் தடைசெய்வதற்காக 2018 ஏப்பிறலில் 15 சதவீதம் கொண்ட சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து தங்கத்தின் இறக்குமதிகள் குறைவடைந்தமையே காரணமாகும். மேலும், இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், வளமாக்கி, அடிப்படை உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம், தாள் மற்றும் தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, புடவை மற்றும் புடவைப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,877 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு நூலிழை மற்றும் துணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சிமெந்து தூண்களினால் உந்தப்பட்ட கனிப்பொருள் உற்பத்திகளின் இறக்குமதிகளும் 5.7 சதவீதத்தினால் அதிகரித்தன.

5

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவு மற்றும் குடிபானங்கள், உணவல்லா நுகர்வுப்பொருட்கள் இரண்டின் மீதுமான குறைந்த செலவுகளே காரணமாகும்.** இதன்படி, 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,441 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,499 மில்லியனுக்கு 27.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் 63 சதவீதத்திற்கு வகைகூறும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,582 மில்லியனுக்கு 31.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சிடைந்தது. அத்தகைய குறைப்பிற்கு ஐ.அ.டொலர் 496 மில்லியனுக்கு 54.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த தனியாள் ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகள் முக்கிய தூண்டுதலாக விளங்கி தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான பாரிய செலவினத்தினை ஊக்கமிழக்கச் செய்வதற்காக 2018 ஒகத்திலிருந்து நவெம்பர் வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. எனினும், அத்தகைய கட்டுப்பாடுகள் 2019 மாச்சில் அகற்றப்பட்ட வேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட தனியாள் உந்து ஊர்தி வகைகளின் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது. உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான சலுகை ரீதியான உரிமைப் பத்திரங்களைப் பயன்படுத்துவது தொடர்பிலான குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமையானது அண்மைய மாதங்களில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்திருக்கின்றன. ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் தளபாடப்பொருட்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பன மீதான இறக்குமதிகளும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் இக்காலப்பகுதியில் 0.4 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 917 மில்லியனுக்கு 20.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு (ஆண்டிற்கு ஆண்டு) தானியங்கள் மற்றும் அரைக்கும் ஆலை உற்பத்திகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். தானியங்கள் மற்றும் அரைக்கும் ஆலை உற்பத்திகளின் இறக்குமதிகள் 80.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2018/19 பெரும்போக காலத்தில் அபரிமிதமான அறுவடையிலிருந்து கிடைத்த மேம்பட்ட உள்நாட்டு நிரம்பலைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரிசி இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். சீனி, காய்கறிகள், பண்ணை உற்பத்திகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு போன்ற உணவு மற்றும் குடிபானங்களின் கீழான ஏனைய வகைகள் மீதான இறக்குமதிச் செலவினமும் வீழ்ச்சியடைந்தது.

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்களின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 3,002 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.** வர்த்தக ரீதியான வாடகை ஊர்திகள், சரக்கு வண்டிகள், பேருந்துகள் அதேபோன்று கப்பல்கள் மற்றும் படகுகள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினம் 22.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அத்தகைய குறைப்பின் பெரும்பகுதிக்கு 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட நான்கு கப்பல்களின் தளத் தாக்கமே காரணமாகும். கட்டவாக்கப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் 0.6 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு, சிமெந்து மற்றும் மர உற்பத்திகளின் குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். அதேவேளை, பொறி மற்றும் சாதனங்களின் இறக்குமதி 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து பொறிகள் மற்றும் கருவிகளின் உதிரிப்பாகங்கள், அச்சிடல் பொறிகள், அலுவலக எந்திரங்கள், புடவைக் கைத்தொழில் பொறிகள், இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பனவற்றின் தாழ்ந்த இறக்குமதிகளைப்


பிரதிபலிக்கிறது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட வீழ்ச்சி 2019இன் முதல் எட்டு மாதங்களின் கூடுதலான காலப்பகுதியில் நிலவிய மிதமான நடவடிக்கைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

## வர்த்தக மாற்று விகிதம்

- **ஏற்றுமதி விலைகள் இறக்குமதி விலைகளின் வீழ்ச்சியிலும் பார்க்க விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் சிறிதளவினால் தேய்வடைந்தது.** 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச்சுட்டெண் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் எந்திரச் சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் அடிப்படை உலோகங்கள், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள் என்பனவற்றின் குறைந்த விலைகளும் அதேபோன்று காய்கறிகள் தவிர்ந்த வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழான அனைத்துத் துணை வகைகளினதும் குறைந்த விலைகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன. ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் இதே காலப்பகுதியில் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளினதும் விலைக் குறைப்புக்களே முக்கிய காரணமாகும். இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளின் கீழ் எரிபொருள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், வைரங்கள், பெறுமதிமிக்க கற்கள் மற்றும் உலோகங்கள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள் என்பனவற்றின் தாழ்ந்த விலைகள் இறக்குமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைவதற்கு முக்கியமாகப் பங்களித்தன. முதலீட்டுப்பொருட்களுடன் தொடர்பான விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் சாதனங்கள், கட்டடவாக்கப்பொருட்களின் தாழ்ந்த விலைகள் காரணமாக இருந்த வேளையில் காய்கறிகள், சீனி மற்றும் இனிப்பு வகைகள், பாற்பண்ணை உற்பத்திகள், வீட்டுச்சாதனங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பனவற்றின் தாழ்ந்த விலைகளின் காரணமாக நுகர்வுப்பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 104.3 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 104.2 சுட்டெண் புள்ளிகளுக்கு 0.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) தேய்வடைந்தது. அதேவேளை, எண்ணெய் தொடர்பான உற்பத்திகள் நீங்கலாக வர்த்தக மாற்று விகிதம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 0.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 5.4

வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பணிகளிலான வர்த்தகம்[1]

- **முதற்காலாண்டுப்பகுதியில் மேம்பட்ட செயலாற்றம் காணப்பட்ட போதும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை உடனடுத்து இரண்டாம் காலாண்டுப்பகுதியில் பணிகள் கணக்கு பின்னடைவினால் பாதிக்கப்பட்டது.** 2019இன் மே மற்றும் யூன் மாதங்களில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்கக் குறைப்பொன்று காணப்பட்டது. சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட குறைப்பும் போக்குவரத்துத் துறையின் பயணிகள் பணிகளிலிருந்தான வருவாய்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. மேலும், இறக்குமதிகளில் ஏற்பட்ட சுருக்கம் 2019இன் முதலரைப்பகுதியில் சரக்குப் போக்குவரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கணனிகள் பணிகள் துறை தொடர்ந்தும் அதன் உத்வேகம் மிக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 10.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. விளைவாக, காரணமாக 2019இன் முதலரைப்பகுதியில் பணிகள் துறையின் மிகை 2018இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுக்குச் சுருக்கமடைந்தது.

## சுற்றுலாத் துறையின் அபிவிருத்திகள்


- **தொடர்பான அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த பயன்களின் காரணமாக**

1 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியினை உள்ளடக்கிய வணிகப்பொருள் வர்த்தகத் தரவு நீங்கலாக சென்மதி நிலுவையிலுள்ள பெரும்பாலான மற்றைய தரவுகள் 2019இன் முதலரைப்பகுதிக்கு மாத்திரமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவான வேகத்தில் மீட்சியடைந்து வருகிறது.** 2019இன் முதல் காலாண்டுப்பகுதியில் முன்னொருபோதுமில்லாத மிக உயர்ந்த காலாண்டு சுற்றுலா வருகைகளைப் பதிவுசெய்ததன் மூலம் 4.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த சுற்றுலாக் கைத்தொழில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இதன்படி, 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கைத்தொழிலின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்து 1,376,312 சுற்றுலாப் பயணிகளுக்கு 20.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. சுற்றுலாப் பயணிகளின் வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,583 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. கொள்கை மட்டத்தில் பொருத்தமான விதத்திலும் உரிய நேரத்திலும் எடுக்கப்பட்ட மீட்பு வழிமுறைகள், பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம், சுற்றுலாத் துறையில் காணப்பட்ட வியாபாரங்களுக்கான நிதியியல் உதவி மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு என்பன எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவான வேகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மீளெழுச்சியடைய உதவின. 2019இன் மே மற்றும் யூன் மாதங்களில் முக்கிய சுற்றுலா நாடுகளினால் இலங்கை மீது விதிக்கப்பட்ட பயண ஆலோசனைகள் மென்மைப்படுத்தப்பட்டமை பின்னடைவுகளிலிருந்து மீட்பதற்காக இலங்கை அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட முன்முயற்சிகளுக்கு உதவியாக அமைந்தது. செத்தெம்பரில் மோசமான தன்மையொன்று பதிவுசெய்யப்பட்ட போதிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் காணப்பட்ட மாதாந்த வீழ்ச்சி அண்மைய மாதங்களில் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டது. 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், பிராந்தியங்களைப் பொறுத்தவரையில் மொத்த வருகைகளில் ஏறத்தாழ 18 சதவீதத்திற்கு வகைகூறும் மேற்கு

வரைபடம் 5.5


சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




*மூலங்கள்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.6

நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை (சன-செத் 2019)




*மூலம்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைள் 17.5 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்த வேளையில் தென்னாசியா நாடுகளிலிருந்தான வருகைகள் 20.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நாடுகளின் அடிப்படையிலான பகுப்பாய்வுகளின் நியதிகளில் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இந்தியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 241,666 வருகைகளுக்கு 19.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சீனாவிலிருந்தான வருகைகள் 123,220 வருகைகளுக்கு 41.3 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தன.

- **சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் பின்னடைவுகள் காணப்பட்ட போதும் 2019இன் முதலரைப்பகுதியில் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க முதலீடுகளைக் கவர்ந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அமைந்துள்ள முதலீட்டாளர் தொடர்புகள் அலகு (ஒரே கூரையின் கீழான அலகு என முன்னர் அறியப்பட்டது). ஐ.அ.டொலர் 26 மில்லியன் பெறுமதி கொண்ட 32 விடுதிச் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலை வழங்கியது. இதன்படி, 2010இல் முதலீட்டாளர் தொடர்புகள் அலகு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2019 யூன் இறுதியளவில் 19,218 அறை இயலளவினைக் கொண்ட மொத்த முதலீடான ஐ.அ.டொலர் 2,981 மில்லியனுடன் 382 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலை வழங்கியது. இதில் 6,797 அறைகளுடன் கூடிய 107 செயற்றிட்டங்கள் கட்டுமானத்தின் கீழ் இருந்த வேளையில் 10,211 அறைகளுடன் கூடிய 207 செயற்றிட்டங்கள் 2019 யூன் இறுதியளவில் தொழிற்படத் தொடங்கின. 2019இன் முதற்காலாண்டுப் பகுதியில் 66 சுற்றுலாவிடுதிகளுக்காக ஐ.அ.டொலர் 107 மில்லியன் பெறுமதி கொண்ட புதிய முன்மொழிவுகள் பெறப்பட்டதுடன்

இச்செயற்றிட்டங்கள் நிறைவடையும் பொழுது இத்தொழில் துறைக்கு 1,407 அறைகள் சேர்க்கப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஐ.அ.டொலர் 19 மில்லியன் பெறுமதி கொண்ட 25 புதிய முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றிருப்பதானது இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலின் உள்ளார்ந்த வளத்தின் மீது முதலீட்டாளர்கள் கொண்டிருக்கும் தொடர்ச்சியான ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாக இருப்பதனைக் கவனித்தல் வேண்டும்.

- **உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் சுற்றுலாக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கு அநேக வழிமுறைகள் எடுக்கப்பட்ட வேளையில் சுற்றுலா உபாயத் திட்டம் 2017 - 2020 இன் கீழ் கொள்கை முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தப்பட்டன.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குத்தலின் மோசமான தாக்கத்தைத் தணிக்கும் பொருட்டு சுற்றுலா ஊக்குவிப்பு, நிதி மற்றும் இறை ஆதரவுகளின் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதன்படி, சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட வியாபாரங்களினால் எடுக்கப்பட்ட கடன்கள் தொடர்பில் மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டின் மீதும் 2020 மாச்சு 31 செல்லுபடியாகக்கூடிய விதத்தில் 2019 மேயில் படுகடன் சட்ட இசைவுத் தாமதம் உட்பட, பொருளாதார நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், படுகடன் சட்ட இசைவுத் தாமதத்திற்குப் புறம்பாக சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாரா ஆர்வலர்களை முக்கிய கவனத்தில் கொண்டு 2019 மேயில் நிதி அமைச்சினால் தனியான நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாவிடுதிகள் மற்றும் சுற்றுப் பயணத் தொழிற்பாட்டாளர்கள் மீதான பெறுமதிசேர் வரி 2019 யூன் 1ஆம் நாளிலிருந்து 2020 மாச்சு 31ஆம் நாள் வரையான காலப்பகுதிக்கு 15 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில் உலோகங்களைக் கண்டறியும் கருவிகள் போன்ற பாதுகாப்புடன் தொடர்பான சாதனங்களின் மீதான இறக்குமதித் தீர்வை அகற்றப்பட்டது. அதேவேளை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், அடையாளம் காணப்பட்ட சந்தைகளில் ஊக்குவிப்பு நடவடிக்கைளை மேலும் மேற்கொண்டது. குறுங்கால உலகளாவிய பிரச்சாரங்கள், இந்திய சந்தையை இலக்காகக் கொண்ட விசேட பொதிகள் போன்ற பல ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. 2019இல் உலகில் விஜயம் செய்ய வேண்டிய முதலாவது நாடாக இலங்கை லோன்லி பிளனெற்றினால் மீள உறுதிப்படுத்தப்பட்டமை மற்றும் 2019இல் உலகின் விஜயம் செய்யத்தக்க முதலாவது நாடாக ரவல் + லெஷர் சஞ்சிகையினால் இலங்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பது சுற்றுலாத் தொழில்துறை மீட்சியடைவதனை விரைவுபடுத்த உதவும்.

5

### முதலாந்தர வருமானம்

- **முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளினால் பங்கிலாபங்களும் மீள்முதலீட்டு வருவாய்களும் உயர்ந்தளவிற்குத் தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்டதன் காரணமாக விரிவடைந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 992 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,097 மில்லியனாக விளங்கியது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சி உயர்ந்தளவு பங்கிலாபங்களை தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பியதுடன் 2018இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த தொகையினை மீள்முதலீடும் செய்திருக்கின்றன. 2019இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2018இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்வாக இருந்தன. எனினும், இக்காலப்பகுதியில் படுகடன் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிறிதளவு குறைவாகக் காணப்பட்டமைக்கு 2018இல் வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கு மேற்பட்ட பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவும் காரணங்களாக அமைந்தன. 2019இன் முதலரைப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் மீதான வருமானமும் 2018ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவாகக் காணப்பட்டது. அதேவேளை, வெளிநாட்டு முதலீடுகளின் மீதான தேறிய வருமானப் பெறுகைகள் 2019இன் முதலரைப்பகுதியில் சிறிதளவாகத் தொடர்ந்துமிருந்தன.

### இரண்டாந்தர வருமானம்

- **2019இன் முதலரைப்பகுதியில் இரண்டாந்த வருமானக் கணக்கில் காணப்பட்ட மிகை மிதமடைந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,624 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,270 மில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2019இன் முதற்காலாண்டில் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவான போக்கொன்று அவதானிக்கப்பட்ட போதும் 2019இன் ஏப்பிறல் மற்றும் யூன் மாதங்களில் படிப்படியான மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது. பன்னாட்டு பெற்றோலிய விலைகளில் தளம்பல் காணப்படுகின்றமைக்கிடையிலும் மத்திய கிழக்குப் பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களினால் தொழிலாளர் பணவனுப்பல்கள் பாதிக்கப்படக்கூடும் போல் தெரிகிறது. 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 5,277 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,930 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் குறைவடைந்தது.

### நடைமுறைக் கணக்கு மீதி

- **முதற்காலாண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்ட மிகை இரண்டாம் காலாண்டுப்பகுதியில் காணப்பட்ட பாரிய பற்றாக்குறையின் மூலம் எதிரீடு செய்யப்பட்டமையினால் 2019இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக் கணக்கு சிறிதளவு பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது.** இதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2018இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,609 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 225 மில்லியன் பற்றாக்குறையைப் பதிவுசெய்தது. இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்கக் குறைப்பு ஏற்றுமதிகளில் காணப்பட்ட உறுதியான வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்து நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு முக்கியமாகப் பங்களிப்புச் செய்துள்ளது. 2019இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,709 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,597 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 2,112 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது.

### மூலதனக் கணக்கு மீதி

5


- **2019இன் முதலரைப்பகுதியில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மிதமாகத் தொடர்ந்துமிருந்தது.** தேறிய அடிப்படையில் ஆண்டின் முதலரைப் பகுதியில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 10 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 8 மில்லியனுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து மூலதனக் கொடைகளின் பெறுகைகளில் மிதமான தன்மையொன்றைப் பிரதிபலித்தது.

### நிதியியல் கணக்கு

- **தேறிய பொறுப்புக்களுக்குள்ளாகும் தன்மை 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,723 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,315 மில்லியனாக விளங்கியது.** நிதியியல் கணக்கின் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் 2019இன் முதலரைப்பகுதியில் அரசாங்கத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் மீள்கொடுப்பனவுகளினால் பெருமளவிற்கு விளக்கப்படுகிறது. 2019 மாச்சு மற்றும் யூன் மாதங்களில் அரசாங்கம் ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெற்றிகரமாக வழங்கிய வேளையில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஐ.அ.டொலர் 1.5 பில்லியனை மீளச்செலுத்தியது. எனினும், 2019இன் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான பெரும்பாலான ஏனைய உட்பாய்ச்சல்கள் மிதமானவையாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. வெளிநாட்டுக் கடன்கள் உட்பட தேறிய நேரடி முதலீடுகள் 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 501 மில்லியனாக விளங்கின. இது, 2018இன் முதலரைப்பகுதியின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நீண்ட காலக் குத்தகைகளிலிருந்தான பெறுகைகளையும் உள்ளடக்கிய ஐ.அ.டொலர் 1.4 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பெறுகைகளைவிடக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாகக் காணப்பட்டது. 2019இன் முதலரைப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் சொத்துக்களின் அபிவிருத்தி, தொலைத்தொடர்பூட்டல்கள், சுற்றுலாவிடுதிகள், துறைமுகங்கள் மற்றும் கொள்கலன் முனைக்கோடி போன்ற துறைகளில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. பங்குரிமை மூலதன வடிவத்திலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 150 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 9 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. 2019இன் முதலரைப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகள் 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 176 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 96 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. 2019இன் முதற்காலாண்டில் அரச பிணையங்கள் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்ததெனினும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை உடனடுத்து குறிப்பாக, 2019 ஏப்பிறல் மற்றும் மேயில் ஓரளவு தளம்பல்கள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக முதரைப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, 2019இன் முதலரைப்பகுதியில்

வரைபடம் 5.7

சென்மதி நிலுவைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 645 மில்லியனினால் வீழ்ச்சியடைந்து அரசாங்கம், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் என்பனவற்றின் தேறிய மீள்கொடுப்பனவினைப் பிரதிபலித்தன. எனினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட வசதியின் ஐ.அ.டொலர் 164 மில்லியன் கொண்ட ஆறாவது தொகுதி பெறப்பட்டமையின் காரணமாக மத்திய வங்கியின் பொறுப்புக்கள் அதிகரித்தன. தனியார் துறை வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தமைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாக அமைந்த வேளையில் 2019இன் முதலரைப்பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடனான மத்திய வங்கியின் பொறுப்புக்கள் குறைவடைந்தன.

- **2019இன் முதலரைப்பகுதியில் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு, 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,034 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,730 மில்லியனாகக் காணப்பட்டது.** நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.8 பில்லியனால் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இருந்ததுடன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலினதும் மீள்கொடுப்பனவுகளினதும் தேறிய தாக்கம் முக்கிய காரணமாகக் காணப்பட்டது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகளும் 2019இன் முதலரைப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு உதவின. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஐ.அ.டொலர் 2.2 பில்லியன் கொண்ட நாணயம் மற்றும் வைப்புக்களின் அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்ட வேளையில், நிலையான வருமானப் பிணையங்கள் ஐ.அ.டொலர் 363 மில்லியனால் குறைவடைந்தன. வங்கித்தொழில் துறையின் நாணயம் மற்றும் வைப்புச் சொத்துக்களும் 2019இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 41 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினாலும் தனியார் துறையினாலும் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் கூட ஆண்டின் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், ஆண்டின் முதலரைப்பகுதியில் நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களில் மிதமான மட்டமொன்றும் பதிவுசெய்யப்பட்டது.

5

### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

- **வதிவற்றோருடனான இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை பன்னாட்டு முதலீட்டு நிலைமை பிரதிபலிக்கப்பட்டவாறு 2018இன் இறுதியிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனால் அதிகரித்தது.** வெளிநாட்டுச் சொத்துக்களின் இருப்பு நிலைமை 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக முக்கியமாக அதிகரித்தது. ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை அதிகரித்தமைக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் கிடைக்கப்பெற்றமை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகள், பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதி கிடைக்கப்பெற்றமை என்பன காரணங்களாக அமைந்தன. அதேவேளை, வதிவுள்ள இலங்கையர்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகளைப் பிரதிபலிக்கின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியில் சிறிதளவு அதிகரித்தது. நாணயம் மற்றும் வைப்புச் சொத்து நிலைமையும் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினால் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமையும் 2019 யூன் இறுதியில் சிறிதளவால் அதிகரித்தன. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினாலும் தனியார் துறையினாலும் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களையும் முற்பணங்களையும் பிரதிபலிக்கின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமை இக்காலப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

- **2019 யூன் இறுதியில் பன்னாட்டு முதலீட்டு நிலைமையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமைகள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** மொத்தப் பொறுப்பு நிலைமை 2018 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 62.5 பில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 64.0 பில்லியனுக்கு அதிகரித்தது. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்புக்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2019இல் அரசாங்கம் ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கிய வேளையில் முன்னர் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மீள்கொடுப்பனவு செய்தது. மேலும், நேரடி முதலீட்டுப் பொறுப்புக்கள் நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்க பெறுமதி இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 2019இன் முதலரைப்பகுதியில் வர்த்தக வங்கிகள் மற்றும் தனியார் துறையின் வெளிநின்ற சொத்துப்பட்டியல் முதலீட்டுப்

பொறுப்பு நிலைமை பன்னாட்டு முறிகளில் புதிய வழங்கல்களோ அல்லது முதிர்ச்சிகளோ காணப்படாமையின் காரணமாக அதேமட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, மொத்த வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 30.4 பில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 29.9 பில்லியனுக்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இதற்கு வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற கடன் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி முக்கிய காரணமாக இருந்த வேளையில் அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் வெளிநின்ற கடன் பொறுப்புக்களும் குறைவடைந்தன. அதேவேளை, தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன் பொறுப்புக்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து சிறிதளவால் அதிகரித்தன. மேலும், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடனான வெளிநின்ற பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக மத்திய வங்கியினால் வெளிநின்ற செலுத்தப்படத்தக்கவையில் குறைப்பொன்று காணப்பட்டது.

- **வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் இலங்கையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமைகளுக்கிடையிலான வேறுபாடாகக் கருதப்படும் இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2019 யூன் இறுதியில் தேறிய பொறுப்பு நிலைமையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களில் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வடிவிலமைந்த உயர்ந்த அரச கடன்பாடுகள் நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட உயர்வுடன் சேர்ந்து ஒட்டுமொத்தத் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2018 திசெம்பர் இறுதியின் ஐ.அ.டொலர் 50.4 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 50.0 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமைக்கு சிறிதளவு குறைந்துள்ளன.


### வெளிநின்ற படுகடன் நிலைமை

- **2019இன் முதலரைப்பகுதியில் இலங்கையின் வெளிநின்ற படுகடன் அதிகரித்தது.** வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 52.3 பில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 55.5 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடனின் பிணையங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அரசாங்கத்தின் வெளிநின்ற செயற்றிட்டக் கடன்களின் குறைப்பு மற்றும் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி என்பனவற்றிற்கிடையிலும் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு 2019 மாச்சில் ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் மற்றும் 2019 யூனில் ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதி கிடைக்கப்பெற்றதுடன் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்த வேளையில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நிலுவையுடனான வெளிநின்ற பொறுப்புக்கள் 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்தன. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன், நாணயம் மற்றும் வைப்புக்கள் மற்றும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்கள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன், இலங்கை இறக்குமதியாளர்களினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களிலும் தனியார் துறையின் வெளிநாட்டுக் கடன்களிலும் காணப்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2019இன் முதலரைப்பகுதியில் சிறிதளவு அதிகரித்தது. மேலும், நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகள் கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குடமையாளர்களின் முற்பணங்களையும் பெற்றதன் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

### ஒதுக்குச் சொத்து நிலைமை

- **நிதியியல் கணக்கிற்கான உயர்ந்தளவு உட்பாய்ச்சல்கள் 2019 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தன.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனிலிருந்து 2019 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு அதிகரித்தன. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் கிடைக்கப்பெற்றமை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் 2019 முதலரைப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதி கிடைக்கப்பெற்றமை என்பன 2019 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமை உயர்வடைவதற்கு பெருமளவிற்குப் பங்களித்தது. 2019 செத்தெம்பர் இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.6 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடவும் போதுமானதாகவும் இருந்தன. மேலும், 2019 செத்தெம்பர் இறுதியில் மொத்த ஒதுக்குச் சொத்து நிலைமை நாட்டின் மொத்தக் குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 64 சதவீதத்தினை உள்ளடக்கப் போதுமானதாகவும் இருந்தது.

வரைபடம் 5.8
மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் இறக்குமதி மாதங்களும்




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

அதேவேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனிலிருந்து 2019 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 11.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 6.8 மாதங்களுக்கான இறக்குமதிக்கு நிதியிடப் போதுமானது.

### திரண்ட நிலுவை


5

- **வலுவடைந்துவரும் நிதியியல் கணக்கு குறைந்த நடைமுறைப் பற்றாக்குறையுடன் சேர்ந்து 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 792 மில்லியன் கொண்ட திரண்ட நிலுவையில் மிகையொன்றினைப் பதிவுசெய்வதற்கு சென்மதி நிலுவையை இயலுமைப்படுத்தியது.** ஐ.அ.டொலர் 2.9 பில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளினது தேறிய கிடைப்பனவு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 285 மில்லியன் தேறிய ஈர்ப்பு என்பன 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் திரண்ட நிலுவை அதிகரிப்பதற்கு உதவின.

### செலாவணி வீத அசைவுகள்


- **2018இல் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்த செலாவணி வீதம் உலகளாவிய மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகளிலிருந்து சில அழுத்தங்களை எதிர்நோக்கிய போதும் 2019இல் சில திருத்தங்களைக் காட்டியது.** 2019இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் செலாவணி வீதம் வலுவடைந்தமைக்கு வர்த்தகப் பற்றாக்குறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்கச் சுருக்கமும் நிதியியல் உட்பாய்ச்சல் அதிகரித்தமையும் உதவியாக அமைந்து உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னர் 4.6 சதவீதம் கொண்ட உயர்விற்கு வழிவகுத்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய அத்தகைய தூண்டுதலளிக்கும் திரவத்தன்மை நிலைமைகள் தேறிய அடிப்படையொன்றில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியது. எனினும், செலாவணி வீதம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினைத் தொடர்ந்து ஏப்பிறலின் பின்னரைப்பகுதியிலும் அரச பிணையங்கள் சந்தையில் சில வெளிநாட்டு முதலீடுகள் முடிவுறுத்தப்படுவதற்குக் காரணமாகிய உலகளாவிய சந்தைகளில் காணப்பட்ட அதிகளவு நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து மீண்டும் ஓகத்தின் பின்னரைப்பகுதியிலும் அழுத்தங்களைக் காட்டியது. இருப்பினும், உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையின் அதன் பின்னரான திரவத்தன்மை மேம்பாடுகள் செலாவணி வீதம் உறுதியடைவதற்கும் 2019 ஒத்தோபர் இறுதியளவில் ரூபா 0.6 சதவீதம் கொண்ட பெறுமதி உயர்வினைப் பதிவுசெய்வதற்கும் ஆதரவளித்தன. அதேவேளை, மத்திய வங்கி 2018இன் செத்தெம்பர் இறுதிவரை ஐ.அ.டொலர் 184.6 மில்லியன் கொண்ட தேறிய வழங்கல்களுடன் ஒப்பிடுகையில்

வரைபடம் 5.9
உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் செலாவணி வீதம்




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

வரைபடம் 5.10
தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள்: 24 - நாணயம் (2017 = 100)




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

2019 செத்தெம்பர் இறுதி வரையிலான ஆண்டு காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 284.8 மில்லியனை ஈர்த்துக் கொண்டது. 2019 ஒத்தோபர் இறுதி வரை குறுக்கு நாணய செலாவணி அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா, இந்திய ரூபா (3.5 சதவீதம்) மற்றும் யூரோ (3.1 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக உயர்வடைந்த வேளையில் ஸ்ரேலிங் பவுண் (1.2 சதவீதம்) மற்றும் யப்பானிய யென்னிற்கெதிராக (1.0 சதவீதம்) தேய்வடைந்தது.

- **ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் வலுவடைந்தமையின் காரணமாக ஐ.அ.டொலருக்கெதிராக மற்றைய முக்கிய நாணயங்கள் தேய்வடைந்தன.** இதன்படி, யூரோ (2.4 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (2.8 சதவீதம்) என்பன ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்த வேளையில் 2019 ஒத்தோபர் இறுதியில் ஸ்ரேலிங் பவுண் (1.8 சதவீதம்), யப்பானிய யென் (1.6 சதவீதம்) ஐ.அ.டொலருக்கெதிராக உயர்வடைந்தது.

- **2019 செத்தெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் ஐந்து நாணயம் மற்றும் 24 நாணயம் இரண்டிற்குமான பெயரளவுத் தாக்கமுள்ள செலவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலவாணி வீதம் ஆகிய இரண்டு சுட்டெண்களும் அதிகரித்தன.** பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அதிகரித்து குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் சேர்ந்து சில முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவு உயர்வடைந்தமையை பிரதிபலித்தன. இதன்படி, 5 நாணயம் மற்றும் 24 நாணயத்தின் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2019 செத்தெம்பர் வரையான இவ்வாண்டுப் பகுதியில் முறையே 2.48 சதவீதத்தினாலும் 2.19 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை, பெயரளவு செலாவணி வீதங்களின் வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாடுகளுக்கிடையேயான பணவீக்க வேறுபாடுகளைப் பரிசீலனையில் கொள்கின்ற இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையை எடுத்துக்காட்டும் 5 நாணயம் மற்றும் 24 நாணயங்களின் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே 3.65 சதவீதத்தினாலும் 3.25 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அடிப்படை ஆண்டு மட்டத்திற்குக் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு நாட்டின் போட்டித்தன்மைக்கு ஆதரவளிக்கின்றது.

5

### எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கங்களிலிருந்து நன்மையடைந்து 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2017 மாச்சிலிருந்து அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சியாக ஏற்றுமதி வருவாய்கள் 2019இலும் நடுத்தர காலத்திலும் உயர்வடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய வர்த்தகப் பங்காளர்களுடன் வர்த்தகத் தொடர்புகளை நிறுவுதல், தூண்டுதலளிக்கும் வர்த்தகக் கொள்கைகள், மிகப் போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதங்களுடன் சேர்ந்து வலுவான நிறுவன ரீதியான ஆதரவு என்பன ஏற்றுமதிகளின் வளர்ச்சி உத்வேகத்தினைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிற்கான ஐக்கிய அமெரிக்காவின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்ட வசதி மீளப்பெறப்பட்டமை இலங்கையின் ஏற்றுமதிகளின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடும் போல் தெரிகிறது. உயர்ந்த தீர்வைக்குட்பட்ட உற்பத்திகள் இலங்கையின் முக்கிய ஏற்றுமதியாகவோ அல்லது இறக்குமதி விடயங்களாகவோ இருக்காமையின் காரணமாக ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையில் தற்பொழுது இடம்பெற்றுவரும் வர்த்தகப் பதட்டங்கள் இலங்கையின் வர்த்தகச் செயலாற்றத்தினைப் பெருமளவிற்குப் பாதிக்குமென எதிர்பார்க்கப்படவில்லை. இருப்பினும்கூட, உலகளாவிய வர்த்தகத்திலும் உலகளாவிய வளர்ச்சியிலும் ஏற்படக்கூடிய மெதுவான போக்கு ஏற்றுமதி வருவாய்களின் மீது எதிர்க்கணியமான கசியும் தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடும். அதேவேளை, 2019இல் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டிருப்பது மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளின் காரணமாக ஆண்டின் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கத் தாக்கத்தினைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. எனினும், சாத்தியமான பருவகாலக் கேள்வியின் காரணமாகவும் சலுகை அனுமதிப்பத்திரங்களின் கீழான உந்து ஊர்திகளின் சாத்தியமான இறக்குமதியில் ஏற்படும் அதிகரிப்புக்களும் ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிட்ட வகை இறக்குமதிகளை அதிகரிக்கக்கூடும். இறக்குமதிச் செலவினம் நுகர்வுப்பொருட்கள் குறிப்பாக, தனியாள் ஊர்திகள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளின் காரணமாக 2020இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக 2019இல் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறை 2020இல் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

- **2019இல் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 2.6 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை வர்த்தகப் பற்றாக்குறையில் எதிர்பார்க்கப்படுகின்ற விரிவின் முக்கிய காரணமாக 2020இல் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 3.1 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** 2019இல் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வர்த்தகப் பற்றாக்குறை உயர்மட்ட பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக ஏற்றுமதி வருவாய்களில் ஏற்படும்

அதிகரிப்பினை இறக்குமதிச் செலவினத்தில் ஏற்படக்கூடிய அதிகரிப்பு விஞ்சுமென எதிர்பார்க்கப்படுவதனால் 2020இல் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை, சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டமையின் முக்கிய காரணமாக 2019இல் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படும் பணிகள் கணக்கின் மிகை உயர்ந்த உட்பாய்ச்சல்களுடன் குறிப்பாக, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பனவற்றின் மூலம் 2020இல் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான ஏற்றுமதிகள் அவற்றின் உத்வேகம்மிக்க வளர்ச்சியைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் உயர்வடைந்த வெளிநாட்டு வர்த்தகம், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி, கொழும்புத் துறைமுகத்தின் அதிகரித்த நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக போக்குவரத்திலிருந்தான வருவாய்கள் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுப் படுகடனின் இருப்பு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் சேர்ந்து உயர்ந்த வட்டி வீதக் கொடுப்பனவுகள், பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீளமுதலீடு செய்யப்பட்ட வருவாய்கள் என்பனவற்றுடன் ஆரம்ப வருமானக் கணக்கின் பற்றாக்குறை அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. அண்மைய ஆண்டுகளின் போக்குகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020இல் மிதமாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமான கணக்குகளிலுள்ள மிகைகளில் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றமைக்கு இடையிலும் வர்த்தகப் பற்றாக்குறையின் எறிவு செய்யப்பட்ட விரிவடைந்து வரும் இணைந்த தாக்கம் மற்றும் ஆரம்ப வருமானக் கணக்குப் பற்றாக்குறை என்பன 2020இல் வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவைகளை வீழ்ச்சியடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் காரணமாக, குறிப்பாக கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டைக் கைத்தொழில் வலயம் போன்ற நீண்ட கால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அதேபோன்று அரசாங்கத்தின் அரச தனியார் பங்குடமைகளூடாக எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் காரணமாக நிதியியல் கணக்கிற்கான பெறுகைகள் 2020இல் மேம்படுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** மேலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய வெளிநாட்டு முதலீடுகள் என்பன உலகம் முழுவதும் பரந்து காணப்பட்ட நாணயக் கொள்கைத் தளர்த்தல்களும் நாட்டில் தேர்தலுக்குப் பின்னரான காலத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகளவான கொள்கையின் உறுதியான தன்மை என்பனவற்றுடன் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் கணக்கிற்கான எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்கள் பன்னாட்டு ஒதுக்குகள் திருப்திகரமானதொரு மட்டத்தில் மீளவலுப்படுத்தப்படுவதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதும் 2019-2023 காலப்பகுதியில் பெருந்தொகையான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் கணிசமான வெளிநாட்டு நிதியிடலைக், குறிப்பாக, நாட்டிற்கான பன்னாட்டு முறி, கூட்டுக் கடன்கள், தீவிரமான பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளிலிருந்தான பெறுகைகள் என்பன மூலம் தேவைப்படுத்துகின்றன. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் எதிர்பார்க்கப்படும் திரவத்தன்மையின் படிப்படியான முன்னேற்றங்களுடன் வர்த்தக வங்கிகளின் நிதியியல் நிலைமை வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலொன்றிற்குள் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்ததும் போட்டித்தன்மை கொண்டதுமான செலாவணி வீதம் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி 2020இன் நடுப்பகுதி வரை தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.** பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை இலங்கை தொடர்பான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது மீளாய்வினை நிறைவு செய்திருக்கின்றதுடன் ஆறாவது தொகுதியின் பகிர்ந்தளிப்பிற்கு ஒப்புதலளித்திருக்கின்ற வேளையில், ஏற்பாடுகளை ஓராண்டினால் 2020 யூன் வரை விரிவாக்கியிருப்பதுடன் எஞ்சியுள்ள பகிர்ந்தளிப்புக்களும் மீள்அட்டவணையிடப்பட்டுள்ளன. இலங்கை விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 2019 யூனிற்கான தேறிய பன்னாட்டு ஒதுக்கினை எய்தியுள்ளது. ஆறாது மீளாய்வின் வெற்றிகரமான முடிவுறுத்தலுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான ஏழாவது கட்டத்தின் பெறுவனவுகள் 2019இன் நவெம்பர் மாதத்தின் ஆரம்பப்பகுதியில் கிடைக்கப் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் நீடிப்பு வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பதன் மூலம் முதலீட்டாளர் நம்பிக்கையைத் தூண்டுவதற்குப் பக்கபலமாக அமையும்.

5

5